# நமது தினகனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol: 02 | Issue: 10 | 4 Pages | 10.8.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 10 | 4 பக்கங்கள் | 10.8.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## இந்தியாவுக்கு முதல் வெள்ளிப் பதக்கம்: நீரஜ் சோப்ராவுக்கு பிரதமர் மோடி வாழ்த்து




புதுடெல்லி, ஆக. 10

33வது ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடந்து வருகிறது. 206 நாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இந்த விளையாட்டு திருவிழா இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. இதில் ஆடவர் ஈட்டி எறிதல் இறுதிப்போட்டி இன்று நடைபெற்றது.

கடந்த ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற நிலையில், இந்தப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றார் நீரஜ் சோப்ரா. இதன்மூலம் நடப்பு ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவுக்கு முதல் வெள்ளிப் பதக்கம் கிடைத்துள்ளது. முதல் செட் சுற்றில் அதிகபட்சமாக 89.45 மீட்டர் தூரத்துக்கு ஈட்டி எறிந்த நீரஜ் சோப்ரா, இரண்டாம் இடம் பிடித்தார்.

பாகிஸ்தான் வீரர் அர்ஷத் நதீம் 92.97 மீட்டர் தூரம் எறிந்து முதலிடம் பிடித்து தங்கப் பதக்கத்தைத் தட்டிச்சென்றார். கரீபியனின் கிரெனடா நாட்டைச் சேர்ந்த ஆண்டர்சன் பீட்டர் 88.54 மீட்டர் தூரம் எறிந்து மூன்றாம் இடம் பிடித்து வெண்கலம் வென்றார்.

2024 ஒலிம்பிக் தொடரின் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில், நடப்பு ஒலிம்பிக் சாம்பியனும், உலக சாம்பியனுமான இந்தியாவின் நீரஜ் சோப்ரா, முதல் வாய்ப்பிலேயே இறுதிச்சுற்றுக்கு முன்னேறி அசத்தியிருந்தார். இதனால் இந்தியாவுக்கு, இவர் மூலம் மீண்டும் தங்கப் பதக்கம் கிடைக்கும் என்ற நம்பிக்கை அதிகரித்தது.

எனினும், தற்போது வெள்ளி வென்றதன் மூலம், அடுத்தடுத்த ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற 4வது இந்தியர் என்ற சாதனையை நீரஜ் படைத்துள்ளார். கடந்த முறை நடைபெற்ற டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில், 87.58 மீட்டர் தூரத்துக்கு ஈட்டி எறிந்து, நீரஜ் சோப்ரா தங்கப் பதக்கம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ள நீரஜ் சோப்ராவுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரதமர் மோடி எக்ஸ் தள பதிவில் கூறியதாவது:

நீரஜ் சோப்ரா ஒரு சிறந்த ஆளுமை கொண்டவர். மீண்டும் மீண்டும் அவர் தனது திறமையை வெளிப்படுத்தி வருகிறார். அவர் மீண்டும் ஒரு ஒலிம்பிக் வெற்றியுடன் வருவதால் இந்தியா மகிழ்ச்சியில் உள்ளது. வெள்ளிப் பதக்கம் வென்ற அவருக்கு வாழ்த்துகள். எதிர்காலத்தில் வரவிருக்கும் எண்ணற்ற விளையாட்டு வீரர்களின் கனவுகளை நனவாக்குவதற்கு அவர் ஊக்கமாக இருப்பார். அவரால் தேசம் பெருமை கொள்கிறது என பதிவிட்டுள்ளார்.

## திருப்பூர் மாவட்ட பத்திரிக்கையாளர் நல மன்றம்

திருப்பூர், ஆக. 10

நமது தின கனி காலை நாளிதழ் ஆசிரியர் திரு கனி ராஜா மற்றும் வெற்றிப்பாதை ஆசிரியர் திரு வரதராஜ் அவர்களின் தலைமையில் நம் பத்திரிக்கை உறவுகளின் ஒத்துழைப்புடன் பத்திரிக்கையாளர்களுக்கு என ஒரு அங்கீகாரமாக நமக்கு நாமே என்று யாரிடமும் நிற்காமல் ஒரு திட்டத்தை வழி வகுத்து உள்ளோம் வரும் காலத்தை கருத்தில் கொண்டு 10 லட்சம் இன்சூரன்ஸ் பாலிசி தமிழகத்தில் பத்திரிக்கையாளர் என்று பெருமை கொள்ளும் விதமாக செயல்பட உள்ளது 09.08.2024. காலை சரியாக 11 மணி அளவில் இன்சூரன்ஸ் பாலிசி பழைய காடு கோல்டன் நகரில் அமைந்துள்ள கனி பவர் ஜிம்மில் நடைபெற்றது இதில் தற்போது சுமார் 45 நபர்கள் மட்டும் பங்கேற்று பயனடைந்தனர் ஆகஸ்ட் 16ஆம்தேதி மறுபேச்சு ஆக தவிர்க்க முடியாத காரணத்திற்காக வர முடியாதவர்கள் பதிவு செய்து கொள்ளலாம் என்று கலந்தாய்வு நடந்தனதொடர்புக்கு. திரு கனிராஜா 9894808044 திரு வரதராஜ் பெருமாள்98942 13323












விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதிக்கு வருகை தரும் தமிழ் தேசியத் தலைவர் தி. வேல்முருகன் MLA.தமிழக வாழ்வுரிமைக் கட்சி.தலைவர் அரசு உறுதிமொழி குழு தலைவர் அவர்களை வருக வருக என வரவேற்கும் செஞ்சி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் இராசநாயகம் ஒன்றிய பொறுப்பாளர் G. ராஜா.அசோகன் மேல்மலையனூர் ஒன்றிய பொறுப்பாளர்கள் சுரேஷ் மாணிக்கம் அனைவரையும் தலைமையேற்று வரவேற்கும் தமிழக வாழ்வுரிமை கட்சியின் மாவட்டம் ஒன்றிய பொறுப்பாளர்கள் கட்சியின் நிர்வாகிகள் அனைவரும் ஏராளமான கலந்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம் தமிழக வாழ்வுரிமை கட்சி செஞ்சி சட்டமன்ற தொகுதி.விழுப்புரம் வடக்கு மாவட்டம் அனைவரையும் வருக வருக என வரவேற்கும் செஞ்சி தொகுதி பொறுப்பாளர் சிறுநாம் பூண்டி ரோஜாதமிழக வாழ்வு கட்சி செஞ்சி சட்டமன்ற தொகுதி

# பெண் வயிற்றில் உபகரணம் வைத்து தைத்த விவகாரம் தனியார் மருத்துவமனைக்கு ரூ.7 லட்சம் நஷ்டஈடு

புதுச்சேரி, ஆக. 10

புதுச்சேரி நல்லவாடு பகுதியை சேர்ந்தவர் பிரபாவதி. இவர் கடந்த 2009 ம் ஆண்டு டிசம்பர் 31ந் தேதி அப்பகுதியில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை மூலம் குழந்தை பெற்றார். சிகிச்சைமுடிந்துவீட்டிற்கு சென்ற பிரபாவதி, தொடர்ந்து வயிற்று வலியால் அவதிப்பட்டார்.



கடந்த 2010 செப்டம்பர் 14ந் தேதி வலி அதிகரித்ததால் மீண்டும் அதே மருத்துவமனைக்கு சென்று மருத்துவப் பரிசோதனை செய்து, மாத்திரை சாப்பிட்டார். வலி குறையாததால் புதுச்சேரி அரசு மகாத்மா காந்தி பல் மருத்துவக் கல்லூரிக்கு சிகிச்சைக்காக சென்றார். அங்கு, குடல்வால் பிரச்சினை இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் அறுவை சிகிச்சைக்காக வயிற்றுப் பகுதியை கிழித்த போது, அடிவயிற்றில் கிளிப் போன்ற மருத்துவ உபகரணம் (ஆர்ட்ரி பர்செப்ஸ்) ஒன்று இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து பிரபாவதி மேல் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு வயிற்றில் இருந்த மருத்துவ உபகரணம் மற்றும் குடல் வால்வு அகற்றப்பட்டது. இதுகுறித்து பிரபாவதி, மருத்துவர்கள்கவனக் குறைவு காரணமாக தனக்கு ஏற்பட்ட பாதிப்பு, சேவை குறைபாட்டிற்கு ரூ. 10 லட்சம் நஷ்டஈடு கேட்டு தனியார் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை நிர்வாகத்தின் மீது புதுச்சேரி மாவட்ட நுகர்வோர் குறைதீர்வு ஆணையத்தில் வழக்கு தொடர்ந்தார்.

புதுச்சேரி மாவட்ட நுகர்வோர் குறை தீர்ப்பு ஆணைய தலைவர் முத்துவேல் மற்றும் உறுப்பினர்கள் கவிதா, ஆறுமுகம் ஆகியோர் கொண்ட அமர்வு விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்கியுள்ளது. அதில் தனியார் மருத்துவக் கல்லூரி நிர்வாகம், பிரபாவதிக்கு மகப்பேறு அறுவை சிகிச்சை செய்த போது கவனக்குறைவாக மருத்துவ உபகரணத்தை நோயாளியின் அடிவயிற்றில் வைத்து தைத்ததால், பல்வேறு தொல்லைகளுக்கும், உடல் உபாதைகளுக்கும் ஆளாகி உள்ளார்.

எனவே பிரபாவதிக்கு ரூ. 7 லட்சம் நஷ்டஈடு, வழக்குத் தொகையாக ரூ. 20 ஆயிரம் என மொத்தம் ரூ. 7 லட்சத்து 20 ஆயிரம் மருத்துவக் கல்லூரி நிர்வாகம், தீர்ப்பின் நகல் கிடைத்த 45 நாட்களுக்குள் வழங்கிட உத்தரவிடப்பட்டது. தவறும் பட்சத்தில் 9 சதவீதம் ஆண்டு வட்டி மேற்படித்தொகை செலுத்தும் வரை கொடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

# உலக கைத்தறி தினத்தை முன்னிட்டு, தேசிய தேவாங்கர் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நலத்திட்ட உதவிகள்






திருப்பூர், ஆக. 10

உலக கைத்தறி தினத்தை முன்னிட்டு, தேசிய தேவாங்கர் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, திருப்பூர் கணக்கம்பாளையத்தில், சிறந்த கைத்தறி நெசவாளர்களை அழைத்து, அவர்களை கௌரவித்து, நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது, இந்த விழாவானது தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாநில ஆலோசனை குழு தலைவர் R. ஆசைத்தம்பி ஆலோசனையின் படி, மாநில ஒருங்கிணைப்பு குழு தலைவர் மகேந்திரன், ஒருங்கிணைப்பில், மாநில பொதுச் செயலாளர் முத்து கருப்பண்ணசாமி தலைமையில், மாநில துணைத்தலைவர் வேலுச்சாமி, மாநில துணைப் பொதுச் செயலாளர் மல்லிகார்ஜுனன் ஹிந்தி பண்டிட், மாநில பொருளாளர் ஜெயராமன், மற்றும் மாநில நிர்வாக குழு உறுப்பினர்களான, கணக்கம்பாளையம் பிரிவு K, குருநாதன், இளங்கோ, பாஸ்கரன், மேட்டுப்பாளையம் சுந்தர்ராஜ் வெள்ளியங்கிரி, பொம்மண்ணன், திருசங்கர் வெங்கடேஷ் மாஸ்கோ நகர் சின்னராஜ், செல்வபுரம் சரவணன் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது, இந்த நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளர்களாக, பட்டயக்காரர் ஆர் ஆர் பாலு செட்டியார் கணக்கம்பாளையம் சௌந்தர்ராஜ் அண்ணன், காந்திநகர் ஆறுமுகம் அண்ணன் அவர்கள், மீனாட்சி நகர் சாமி, என்கிற விசுவநாதன் அவர்கள், பொன்விழா காலனி சுந்தர் அவர்கள், காங்கேயம் ராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர், மற்றும் திரளான தேவாங்கர் சமூகத்தை சேர்ந்த பொது மக்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# பொன்னேரி அருகே அரசு பள்ளி மாணவ, மாணவிகள் சாலை மறியல்

பொன்னேரி, ஆக. 10

பொன்னேரி அடுத்த அண்ணாமலை சேரி பகுதியில் அரசு தொடக்கப் பள்ளி, அரசுஉயர்நிலைப் பள்ளி ஒரே வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. சுமார் 300க்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர்.

பள்ளியில் மொத்தம் 16 ஆசிரியர்கள் இருந்த நிலையில் பணி மாறுதல், பணி ஓய்வு காரணமாக ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைந்தது. ஆனால் புதிதாக ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. இதனால் தற்போது தொடக்க பள்ளிக்கு ஒரு ஆசிரியரும் உயர்நிலைப் பள்ளிக்கு 3 ஆசிரியர்களும் மட்டுமே உள்ளனர்.

வேறு வேறு பாடப்பிரிவு ஆசிரியர்கள் பாடம் எடுப்பதால் மாணவமாணவிகளின் படிப்பு பாதிக்கப்பட்டது. இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார் தெரிவித்தும் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

இந்தநிலையில் ஆசிரியர்கள் பற்றாக்குறையை கண்டித்தும், கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க கோரியும் இன்று காலை பள்ளிக்கு வந்த



மாணவ மாணவிகள் வகுப்புகளை புறக்கணித்து அண்ணாமலை சேரி பொன்னேரி சாலையில் மறியிலில் ஈடுபட்டனர்.

மேலும் அவ்வழியே வந்த 3 அரசு பஸ்களையும் சிறை பிடித்தனர். அவர்களிடம் திருப்பாலைவனம் போலீசார் பேச்சு வார்த்தை நடத்தினர். ஆசிரியர்கள் நியமிப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவிப்பதாக கூறினர். இதைத்தொடர்ந்து மாணவமாணவிகள் மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர்.

# செந்துறை அருகே மான்களை வேட்டையாடிய கும்பல்

செந்துறை, ஆக. 10

அரியலூர் மாவட்டம் செந்துறை பெரிய ஏரி பகுதியில் ஏராளமான மான்கள் வசிக்கின்றன. இந்த பகுதியில் நேற்று துப்பாக்கியால் சுடும் சத்தம் பல முறை கேட்டது. இதனையடுத்து அங்கிருந்த சிலர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்த போது அங்கு 2 மான்கள் துப்பாக்கியால் சுட்டதில் இறந்து கிடந்தது தெரிய வந்தது. போலீசார் வருவதை அறிந்து வேட்டை கும்பல் மான்களை அங்கேயே போட்டுவிட்டு ஓட்டம்பிடித்தது விசாரணையில் தெரிய வந்தது. இதனை



அடுத்து அந்த மான்களை மீட்டு வனத் துறையினரிடம் போலீசார் ஒப்படைத்தனர்.

இதனைத் தொடர்ந்து மான்களை சுட்டு வேட்டை யாடியது யார்? வேட்டைக்கு பயன்படுத்தியது நாட்டு துப்பாக்கியா? அல்லது லைசன்ஸ் துப்பாக்கியா? என்ற கோணத்திலும் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இதுகுறித்து மான்களை பிரேத பரிசோதனை செய்த பிறகு அதில் உள்ளது பால்ரஸ் குண்டா அல்லது துப்பாக்கி குண்டா என்பது உள்ளிட்ட பல்வேறு தகவல் தெரிய வேண்டும் என மாவட்ட வன அலுவலர் இளங்கோவன் தெரிவித்தார்.

இந்த பகுதியில் மான்களை வேட்டையாடிய சம்பவம் மிகப்பெரிய பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில் இன்று அதிகாலை அதே பகுதியில் ஒரு மான் விபத்தில் சிக்கி உயிர் இழந்தது. இது குறித்து செந்துறை போலீசார் மற்றும் வனத்துறையினர் பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆகஸ்ட் 15ந் தேதி ஈஷா மண் காப்போம் சார்பில் அக்ரி ஸ்டார்ட் அப் திருவிழா




கோவை, ஆக. 10

ஈஷா மண் காப்போம் இயக்கம் சார்பில் வேளாண்தொழில்முனைவோர்களுக்கான 'அக்ரி ஸ்டார்ட் அப் திருவிழா' எனும் மாபெரும் பயிற்சி கருத்தரங்கு நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சி கோவை சின்னியம்பாளையம் பிருந்தாவன் ஆடிட்டோரியத்தில் வரும் ஆகஸ்ட் 15 ஆம் தேதி நடைபெற இருக்கிறது.

இது தொடர்பான பத்திரிக்கையாளர் சந்திப்பு கோவை பிரஸ் கிளப்பில் நடைபெறஉள்ளது. இதில் மண் காப்போம் இயக்கத்தின் கள ஒருங்கிணைப்பாளர் திரு. முத்துக்குமார் பங்கேற்றுப் பேச உள்ளார்.

ஈஷா மண் காப்போம் சார்பில் கடந்த பல ஆண்டுகளாக, இயற்கை விவசாயம் குறித்த பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு உள்ளது.

இதன் மூலம் ஆயிரக்கணக்கான விவசாயிகள் இயற்கை விவசாயத்திற்கு திரும்பி வெற்றிகரமாக விவசாயம் செய்து வருகின்றனர். இந்நிலையில் விவசாயிகளை தொழிலதிபர்களாக உருவாக்கும் பொருட்டு இந்தப் பயிற்சி கருத்தரங்கு நடைபெறுகிறது.

விவசாயம் சார்ந்து வெற்றிகரமாக நடைபெறக் கூடிய தொழில்கள் குறித்த விழிப்புணர்வையும், அது சார்ந்த வழிகாட்டுதல்களையும் விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் வழங்கும் நோக்கத்தில் மண் காப்போம் இயக்கம் சார்பில் 'அக்ரி ஸ்டார்ட் அப் திருவிழா கனவு மெய்ப்பட வேண்டும்' எனும் பயிற்சி கருத்தரங்கு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சி புதிய வேளாண்தொழில்முனைவோர்களை உருவாக்கவும், அவர்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்கும் வகையிலும் திட்டமிடப்பட்டு உள்ளது.

இதில் எவ்வாறு விவசாயம் சார்ந்த தொழில் துவங்குவது, அதனை பிராண்டிங் செய்வது குறித்த யுக்திகள், பொருட்களை பேக்கிங்செய்வதில்உள்ள தொழில்நுட்பங்கள், எவ்வாறு சந்தைப்படுத்துவது மற்றும் சமூக வலைதளங்களை முறையாக பயன்படுத்திக் கொள்வது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து துறைசார் வல்லுநர்கள்தங்களின் அனுபவங்களையும், அரியத் தகவல்களையும் பகிர்ந்து கொள்ள உள்ளனர்.

மேலும் விவசாயம் சார்ந்து தொழில் துவங்க அரசு சார்பில் என்ன மாதிரியான உதவித்திட்டங்கள் இருக்கின்றது என்பது குறித்தும் இந்த நிகழ்ச்சியில் நிபுணர்கள் பகிர்ந்து கொள்ள உள்ளனர்.

குறிப்பாக வேளாண் வணிக வாய்ப்புகள் குறித்து தமிழ்நாடு வேளாண் கல்லூரியின் வணிக மேம்பாடு துறையின் நிர்வாக இயக்குனரும், தலைமை செயல் அலுவலருமான திரு. ஞானசம்பந்தம் அவர்கள் பேச உள்ளார்.


மேலும் சிறுதானியங்கள் மூலம் கோடிகளில் வருமானம் ஈட்டும் பிவிஆர் பூட்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் சுபத்ரா, இதுவரை 17,000 தொழில் முனைவோர்களை உருவாக்கி சாதனை படைத்துள்ள S.K. பாபு, ஒரு கிராமத்தில் இருந்து கொண்டு ஆன்லைன் மூலம் விற்பனையில்சாதித்தமுருங்கை விவசாயி பொன்னரசி, தனது 50வது வயதில் தொழில்துவங்கி மூலிகை மதிப்பு கூட்டல் தொழிலில் வென்ற விஜயா மகாதேவன் உள்ளிட்ட பல்வேறு சாதனையாளர்களும், நிபுணர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயனுள்ள தலைப்புகளில் தங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள இருக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்க விரும்புவோர் 83000 93777, 94425 90077 ஆகிய எண்களை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம்.

# 115 அடி ஆழத்தில் அமைய உள்ள மயிலாப்பூர் மெட்ரோ ரெயில் நிலைய கிராபிக்ஸ் காட்சிகள் வெளியீடு

சென்னை, ஆக. 10

சென்னையில் 3 தளங்களுடன் 115 அடி ஆழத்தில் அமைய உள்ள மயிலாப்பூர் மெட்ரோ ரெயில் நிலையத்தின் கிராபிக்ஸ் காட்சிகள் காண்போரை ஆச்சரிய அடைய வைத்துள்ளது.




சென்னையில் 63,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 116 கிமீ தொலைவுக்கு 2ம் கட்ட மெட்ரோ ரெயில் பணிகள் நடைபெறுகின்றன. அனைத்து பகுதிகளிலும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும்

நிலையில், மயிலாப்பூரில்கட்டப்படும்மெட்ரோ நிலையம், மற்ற நிலையங்களை காட்டிலும் ஆழமாகவும் பரந்த பொது தளத்தோடும் உருவாகி வருகிறது. பொது தளம், வணிக வளாகம், மேல் நடைமேடை, கீழ் நடைமேடை என 4 நிலைகளுடன் தரைக்கு கீழே 115 அடி ஆழத்தில் இந்த நிலையம் அமைய உள்ளது.

அதில், முதல் தளத்தில் (தரையிலிருந்து 55 அடி ஆழத்தில்) மாதவரம்சிறுசேரி சிப்காட் செல்லும் மேல்தளப்பாதை ரெயில்களும், 2ம் தளத்தில் (78 அடியில்) கலங்கரைவிளக்கம்பூந்தமல்லி செல்லும் ரெயில்களும், 3ம் தளத்தில் (115 அடியில்) மாதவரம்சிப்காட் செல்லும் கீழ்ப்பாதை ரெயில்களும் வந்து செல்லும் வகையில் அமைக்கப்பட உள்ளது.

மயிலாப்பூரில் நிலத்தின் பரப்பு குறுகியதாக இருப்பதால் குண்டு தளங்கள் அமைக்க வேண்டி உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# போதை காளானில் தேன் ஊற்றி ருசித்த வாலிபர்: வீடியோ சமூக வலைதளத்தில் வைரல்

கொடைக்கானல், ஆக. 10

சர்வதேச சுற்றுலா தலமான கொடைக்கானலுக்கு தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலங்கள், வெளி நாடுகளில் இருந்து சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். இதில் வாலிபர்கள், கல்லூரி மாணவர்களை குறி வைத்து போதை காளான் மற்றும் கஞ்சா அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

போலீசார் ரோந்து பணியை தீவிரப்படுத்தி இவர்களை பிடித்து நடவடிக்கை எடுத்த போதும் தொடர்ந்து கஞ்சா மற்றும் போதை காளான் விற்பனை அதிகரித்து வருகிறது.

கொடைக்கானல் நகர் பகுதி மட்டுமின்றி மேல் மலை கிராமங்களான பூண்டி, மன்னவனூர், கூக்கால் உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் கஞ்சா, போதை காளான் விற்பதாக குற்றச்சாட்டு எழுந்தது.

மலைகிராமங்களில்தங்கும் விடுதிகளில் போதைப்பொருள் பயன்படுத்தப் பட்டதாக எழுந்த புகாரையடுத்து அதிகாரிகள் சோதனை நடத்தி தங்கும் விடுதிக்கு சீல் வைத்தனர்.

இந்த நிலையில் மேல் மலை கிராம பகுதியில் ஒரு வாலிபர் போதை காளானை பறித்து அதில் தேன் ஊற்றி ருசிப்பது போன்ற காட்சிகள் அடங்கிய வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அதில் சிலர் போதை காளானை எவ்வாறு பயன்படுத்துவது, எந்த பகுதியில்அதிகமாககிடைக்கும் எனவும் சிலர் கருத்து பதிவிட்டுள்ளனர்.

போதை காளான், கஞ்சா விற்பனையில் கும்பல் தீவிரமாக இயங்கி வருகிறது. கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் இந்த பழக்கத்திற்கு அடிமையாகி தங்கள் வாழ்வை தொலைத்து வருகின்றனர்.

எனவே கொடைக்கானல் மலைப்பகுதியில் சிறப்புக்குழு அமைத்து கஞ்சா மற்றும் போதை காளான் விற்பனை செய்யும் கும்பல் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்எனசமூகஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சுதந்திர தினத்தன்று கிராமசபை கூட்டம் நடத்த தமிழக அரசு உத்தரவு




சென்னை, ஆக. 10

ஆகஸ்ட் 15ந் தேதி சுதந்திர தினத்தன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டம் நடத்த தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இது தொடர்பாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் பொன்னையா மாவட்ட கலெக்டர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில்கூறிஇருப்பதாவது: சுதந்திர தினத்தன்று காலை 11 மணியளவில் கிராம சபை கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். கிராம மக்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் இடம், நேரத்தை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். தூய்மையான குடிநீர் விநியோகம், வரி செலுத்தும் சேவை, இணைய வழி மனை பிரிவு, கட்டிட அனுமதி, சுய சான்றிதழ் அடிப்படையில் குடியிருப்பு கட்டிடங்களுக்கு உடனடி பதிவின் மூலம் அனுமதி வழங்குதல் உள்ளிட்டவை குறித்தும் கூட்டத்தில் ஆலோசிக்க வேண்டும் . மேலும், சுயசான்று கட்டிட அனுமதி பெறு வதற்கான செயல்முறைகள், தமிழ்நாடு எளிமைப் படுத்தப்பட்ட ஊராட்சி கணக்கு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தூய்மை பாரத இயக்கம், ஜல்ஜீவன் திட்டம் உள்ளிட்டவை தொடர்பாகவும், பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், அரசு பொது கட்டிடங்கள் அனைத்திலும் குழாய் இணைப்புகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படு வதை உறுதி செய்வது உள்ளிட்டவை குறித்தும் விரிவான ஆலோசனை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துபாய்திருச்சி வந்த விமானத்தில் ரூ.47.5 லட்சம் தங்கம் பறிமுதல்

திருச்சி, ஆக. 10

திருச்சி விமான நிலை யத்தில் இருந்து மலேசியா, சிங்கப்பூர், மஸ்கட், ஓமன், துபாய் , இலங்கை, அபுதாபி உள்ளிட்ட நாடுகளுக்கு விமான சேவைகள் இயக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு இயக்கப்படும் விமானங்களில் தங்கம் பல்வேறு முறைகளில் மறைத்து கடத்தி வரும் பயணிகளிடமிருந்து தங்கத்தை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துவருகின்றனர்.இந்தநிலையில்நேற்றுதுபாயிலிருந்து ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் திருச்சி வந்தது. இந்த விமானத்தில் வந்த பயணிகளின் இருக்கை ஒன்றில் பார்சல் இருந்தது தெரிய வந்தது. இதனை அறிந்த விமான நிறுவன ஊழியர்கள் உடனடியாக சுங்கத்து றை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். உடனடியாக விமானத்தில் ஏறி சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்த போது இருக்கையின் அடியில் மறைத்து 6 பார்களாக எடுத்து வரப்பட்ட 700.400 கிராம் தங்கத்தை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதன் இந்திய ரூபாயின் மதிப்பு ரூ.47.50 லட்சம் என அதிகாரிகள் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து அந்த இருக்கையில் அமர்ந்து வந்த பயணியின் ஆவணங்களை சோதனை செய்தபோது அந்த பயணி விமான நிலைய வளாகத்திற்குள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனை அறிந்த சுங்கத்துறை அதிகாரிகள் அவரிடம் நடத்திய விசாரணையில் தான் கொண்டு வந்த தங்கத்தை இருக்கையில் வைத்து விட்டு வந்ததாக தெரிவித்ததை தொடர்ந்து அந்த பயணியை கைது செய்து, தங்கத்தை பறிமுதல் செய்து அவரிடம் தொடர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சாதி, மத வேறுபாடின்றி மாமதுரை விழாவை கொண்டாட வேண்டும்: முதல்வர் மு.க ஸ்டாலின்



சென்னை, ஆக. 10

தவறு செய்தவர் மன்னனே ஆனாலும் கேள்வி கேட்ட மண் மதுரை' என மாமதுரை விழா துவக்க நிகழ்ச்சியில் முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் பேசினார்.

மதுரையில் 4 நாட்கள் மாமதுரை நிகழ்ச்சி நடைபெறுகிறது. நிகழ்ச்சியை சென்னையில் இருந்து காணொலி வாயிலாக தொடங்கி வைத்து முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

மன்னரையே கண்ணகி கேள்வி கேட்ட இடம் மதுரை. தவறு செய்தவர் மன்னனே ஆனாலும் கேள்வி கேட்ட மண் தான் மதுரை. சென்னைக்கு அடுத்து 2வது மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டது மதுரை. மாபெரும் பன்னாட்டு விழாவாக சித்திரை திருவிழா நடக்கிறது.

பழமை மாறாமல் ஊரை பாதுகாப்பது அவசியம். அதே நேரத்தில் நவீன வசதிகளை தர வேண்டும். பண்பாட்டு விழாவை அனைவரும் கொண்டாட வேண்டும். காலம் தோறும்

மதுரை மாநகரம் மாறிய காட்சிகள், மதுரை தமுக்கம் மைதானத்தில் இடம் பெற்றுள்ளது. ஜாதி, மத வேறுபாடின்றி அனைவரும் ஒன்றிணைந்து மாமதுரை விழாவை கொண்டாட வேண்டும். பழமைக்கு பழமையாய், புதுமைக்கு புதுமையாய் இளைஞர்கள் ஊரை போற்றி பாதுகாக்க வேண்டும்" இவ்வாறு ஸ்டாலின் பேசினார்.

# விநாயகர் சதுர்த்தியை யொட்டி திருப்பூரில் சிலைகள் தயாரிக்கும் பணிகள் தீவிரம்



திருப்பூர்,ஆக.10

இந்துக்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான விநாயகர் சதுர்த்தி அடுத்த மாதம் 7ந்தேதி கொண்டாடப்படுகிறது. இதை யொட்டி தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இந்து அமைப்பு களின் சார்பில் பொது இடங்களில் விநாயகர் சிலை வைத்து வழிபடுவது வழக்கம்.

இதற்காக தற்போது முதலே விநாயகர் சிலைகள் உற்பத்தி செய்யும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. திருப்பூர் மாவ ட்டம் அலகு மலை அருகே விநாயகர் சிலை தயாரிப்பு பணிகள் தீவிரமடைந்து ள்ளது. சுமார் ஒரு அடி முதல் 5 அடி வரையிலான விநாயகர் சிலைகள் உற்பத்தி செய்யப்பட்டு வர்ணம் தீட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த வருடம் கோமாதா விநாயகர் , சிவன் பார்வதியுடன் கூடிய விநாயகர், முருகனோடு அமர்ந்துள்ள விநாயகர் , ஆஞ்சநேயர் தூக்கி செல்வது போன்ற விநாயகர் உள்ளிட்ட வடிவ ங்களில் விநாயகர் சிலைகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்து அமைப்புகள் தங்கள் பகுதிகளுக்கு தேவையான விநாயகர் சிலைகளை பதிவு செய்து வருகின்றனர். விநாயகர் சதுர்த்திக்கு ஓரிரு நாட்கள் முன்னதாக இங்கிருந்து விநாயகர் சிலைகளை எடுத்து செல்வர்.

விநாயகர் சிலைகள் வழிபாட்டிற்கு பின்பு ஆறு மற்றும் குளங்களில் கரைக்கும் போது மாசு ஏற்படுத்தாத வகையில் உற்பத்தி செய்ய வேண்டும் என தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியம் வலியுறுத்தியுள்ளது. இதனை கருத்தில் கொண்டு மாசு ஏற்படுத்தாத வகை யிலான பொருட்களை கொண்டு சிலைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக சிலை வடிவ மைப்பாளர்கள் தெரிவி த்துள்ளனர்.★ ★ ★

திருப்பூர் அலகுமலை பகுதியில் விநாயகர் சிலைகள் தயார் செய்யப்பட்டு வர்ணம் தீட்டும் பணி நடைபெற்று வருவதை படத்தில் காணலாம்.

# வக்பு சட்டத்திருத்தத்தை ரத்துசெய்ய வேண்டும்: எடப்பாடி பழனிசாமி



சென்னை, ஆக. 10

மக்களவையில் வக்பு வாரிய சட்ட திருத்த மசோதா இன்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த சட்ட திருத்த மசோதாவுக்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன. இந்த நிலையில், வக்பு சட்டத்திருத்தத்தை ரத்து செய்ய வேண்டுமென எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருப்பதாவது;

"வக்பு சட்டத்தில் மத்திய அரசு கொண்டுவந்துள்ள திருத்தங்கள் சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தினரின் உரிமைகளை பறிக்கும் வகையில் உள்ளது. அரசியலைமைப்பு சட்டம் வழங்கியுள்ள மதச்சுதந்திரத்தை மறுக்கும் வகையில் உள்ளது.

முஸ்லிம்களின் நலனுக்காக முஸ்லிம்களால் அர்ப்பணிக்கப்பட்ட சொத்துக்களை அவர்களிடமிருந்து பறித்து அரசு நிர்வகிக்க நினைப்பது தவறானது. மட்டுமின்றி, வக்பு வாரியத்தில் முஸ்லிம் அல்லாதவர்களையும் அதனை நிர்வகிக்க ஒப்புதல் அளிக்கும் திருத்தம் ஏற்புடையதல்ல.

வக்பு சொத்துகள் தொடர்பான தரவுகளை சேகரிக்கும் மாநில அரசின் பணிகளை பறித்து மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு செல்வது கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரானது. ஆகவே, மதச்சிறுபான்மையினருக்கு அரசியலமைப்புச் சட்டம் வழங்கிய உரிமைகளை பறிக்கும் இந்த சட்டத்திருத்தத்தை மத்திய அரசு முழுவதுமாக ரத்து செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தாமிரபரணி, கடனா நதிகளில் வெள்ளப்பெருக்கை கண்காணிக்கும் நவீன முன்எச்சரிக்கை கருவிகள்



நெல்லை, ஆக. 10

தமிழகத்தில் கடலோர பகுதிகளில் கடல் சீற்றம் உள்ளிட்ட மாற்றங்களை முன்கூட்டியே உடனுக்குடன் கண்டறியும் வகையில் 450 இடங்களில் இ.டபிள்யூ.எஸ். எனும் ஆரம்ப எச்சரிக்கை நவீனகருவிகளை அமைக்கும் பணிகளை பேரிடர் மேலாண்மை கடந்த சில நாட்களுக்கு முன்பு தொடங்கியது.

நெல்லை மாநகராட்சி மூலமாக கேபாசிட்டிஸ் என்னும் திட்டத்தின் கீழ் ரூ.88 லட்சம் மதிப்பில் தாமிரபரணி, ராமநதி மற்றும் கடனா நதிகளில் வெள்ளப்பெருக்கினை முன்கூட்டியே கண்காணித்து எச்சரிக்கை குறுஞ்செய்திகளை அனுப்பும் வகையில் 10 இடங்களில் கருவிகள் பொருத்தப்பட்டு வருகிறது.

தனியார் நிறுவனத்தின் மூலம் அமைக்கப்படும் இந்த கருவிகள் விரைவில் மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டு அதன் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கருவிகள் தாமிரபரணி, கடனா, ராமநதி வழித்தடங்களான கோபாலசமுத்திரம், கோவில்குளம், ஆழ்வார்குறிச்சி, ஆலடியூர், பொட்டல்புதூர், கல்லிடைக்குறிச்சி, முக்கூடல், முறப்பநாடு, சேரன்மகாதேவி, கொக்கிரகுளம் ஆகிய இடங்களில் அமைகிறது.

இதன் மூலம் ஆறுகளில் எவ்வளவு வெள்ளம் வரும்? எப்போது வரும்? என்பது உள்ளிட்ட அனைத்து விபரங்களும் எஸ்.எம்.எஸ். மூலம் அந்தந்த பகுதி மக்களுக்கு தெரியப்படுத்தப்படும். இதன் மூலம் வெள்ள அபாயத்தை முன்கூட்டியே அறிந்து எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

இந்த தகவல்கள் மாநகராட்சி அலுவலகம், மாவட்ட கலெக்டர் அலுவலக கட்டுப்பாட்டு அறை, முக்கிய அலுவலகங்களுக்கு அனுப்பபபடும். இதில் சேரன்மகாதேவி மற்றும் கொக்கிரகுளத்தை தவிர மற்ற இடங்களில் கருவி அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.

இந்த கருவியில் காமிரா, சென்சார் வசதி, சோலார் பேனல் உள்ளிட்ட நவீன அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த கருவிகள் அமைப்பது குறித்து கலெக்டர் கார்த்திகேயன், மாநகராட்சி கமிஷனர் சுகபுத்ரா ஆகியோர் மற்ற அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

# சிறுபான்மையினரின் உரிமைகளை பறிக்கிற வக்பு சட்ட திருத்தத்தை திரும்பப் பெற வேண்டும்: செல்வப்பெருந்தகை குற்றச்சாட்டு



சென்னை, ஆக. 10

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

இந்தியா ஒரு சமய சார்பற்ற நாடு என்பதை அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை தெளிவாக கூறுகிறது. அதனால், அரசமைப்புச் சட்டத்தில் எல்லா மதங்களுக்கும் சம உரிமை வழங்கப்பட்டுள்ளது. அவை பற்றி உறுப்புகள் 25 முதல் 28 வரை தெளிவாக கூறுகின்றன. இந்நிலையில் மக்களை மதரீதியாக பிளவுபடுத்துகிற அரசியலை கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தி வருகிற பா.ஜ.க. ஆட்சியாளர்கள்மூன்றாவதுமுறை ஆட்சியில் அறுதிப் பெரும்பான்மை இல்லாமல் தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரதமராக மோடி பொறுப்பேற்றாலும், அவரது செயல்பாடுகளில் எந்த மாற்றமும் இல்லை. அரசமைப்புச் சட்டத்தில் சிறுபான்மையின மக்களைபாதுகாக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் 1954ல் பிரதமர் பண்டித நேருவின் முயற்சியால் நிறைவேற்றப்பட்ட வக்பு சட்டத்தை பறிக்கிற வகையில் அச்சட்டத்தைதிருத்துவதற்கான முயற்சியில் மோடி அரசு ஈடுபட்டிருக்கிறது. இத்திருத்தத்தின் மூலம் சிறுபான்மை சமூகத்தில் உள்ள முஸ்லிம் தனவந்தர்கள் சமூக நலனுக்காக நன்கொடையாக வழங்கிய சொத்துக்களான வக்பு சொத்துக்களை நிர்வகிப்பதில் இச்சட்டத் திருத்தத்தின் மூலம் மத்திய அரசு தலையிட முற்பட்டிருக்கிறது.

வக்பு வாரிய சட்டத்தில் நாற்பதிற்கும் மேற்பட்ட திருத்தங்களை மேற்கொள்ளவிருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளன. மேலும், புதிய மசோதாவில் ஏற்கனவே இருந்த வக்பு சட்டத்தில் உள்ள உறுப்பு 40ன்படி எது வக்பு சொத்து என்பதை வக்பு வாரியம்தான் முடிவு செய்ய வேண்டும். இத்திருத்தங்களின் மூலம் வக்பு வாரியத்தின் சொத்துக்களை தனது சொத்து என்று முடிவெடுக்கிற அதிகாரத்தை பறிக்க முயல்கிறது. மேலும், வக்பு வாரியத்தில் இரண்டு முஸ்லிம் பெண்களையும், இரண்டு முஸ்லிம் அல்லாதவர்களையும் அதில் உறுப்பினர்களாக நியமிக்க இத்திருத்தம் வகை செய்கிறது. இது அப்பட்டமாக மத சுதந்திரத்தில் தலையிடுகிற செயலாகும். இந்த சொத்து குறித்து ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால்

அதுகுறித்து முடிவு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்குகிறது. ஆனால், ஏற்கனவே உள்ள வக்பு வாரிய சட்டத்தின்படி இதை முடிவு செய்வது வக்பு தீர்ப்பாயம்தான்.

இந்தியா முழுவதும் வக்பு வாரியத்திற்கு 8.7 லட்சம் எண்ணிக்கையிலான சொத்துகளில் 9.4 லட்சம் ஏக்கர் நிலங்கள் உள்ளன. இதனுடைய மதிப்பு ரூபாய் 1.2 லட்சம் கோடி என்று கூறப்படுகிறது. இதன்படி வக்பு சொத்துகள் இந்தியாவில் மூன்றாவது பெரிய உரிமையாளர் என்ற நிலையில் இருக்கிறது. இத்தகைய சொத்துகளை நிர்வகிக்கிற உரிமையை வக்பு வாரியத்திலிருந்து அபகரித்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பறிக்கிற முயற்சியில் பா.ஜ.க. ஈடுபட்டிருக்கிறது. இந்த முயற்சியை முஸ்லிம் அமைப்புகளும், இந்தியா கூட்டணி கட்சிகளும் கடுமையாக எதிர்க்கின்றன. இஸ்லாமிய சமுதாயத்தில் எந்த பிரச்சினையாக இருந்தாலும் அதுகுறித்து அகில இந்திய இஸ்லாமிய தனிநபர் சட்ட வாரியத்தையோ அல்லது வக்பு அமைப்புகளையோ, அதைச்சார்ந்த தலைவர்களையோ கலந்து பேசாமல் தன்னிச்சையாக எதேச்சதிகாரமான முறையில் சிறுபான்மையின சமுதாயத்திற்கு எதிராக வக்புசட்டதிருத்தத்தின் மூலம் கடுமையான அடக்குமுறை ஏவி விடப்பட்டிருக்கிறது.

தற்போது இத்திருத்தத்தின் மூலம் சொத்து உரிமையை நிர்ணயம் செய்வதை மாவட்ட ஆட்சித் தலைவர் வழியாக மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் இஸ்லாமிய சமுதாயத்தினரின் நலன்களை பாதுகாக்கிற வகையிலும், பலவிதமான சமூக நலத் திட்டங்களை நிறைவேற்றி, ஏழை, எளிய மக்களுக்கு உதவி செய்து வருகிற வக்பு வாரியத்தின் சொத்துகளை முடக்குகிற முயற்சி அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமானதாகும்.

இச்சட்ட திருத்தத்தை திரும்பப் பெற வேண்டுமன காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகள் நாடாளுமன்றத்தில் இன்று எதிர்ப்பு குரல் எழுப்புகின்றன. நாடாளுமன்ற ஜனநாயகத்தில் மோடி அரசுக்கு நம்பிக்கை இருக்குமேயானால் சிறுபான்மையினரின் உரிமைகளை பறிக்கிற வக்பு சட்ட திருத்தத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# அரசு பள்ளி வகுப்பறையில் மேற்பூச்சு பெயர்ந்து விழுந்து 3 மாணவிகள் காயம்: செங்கல்பட்டு அருகே பரபரப்பு



செங்கல்பட்டு, ஆக. 10

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அருகே சிறுதாவூர் பகுதியில் அரசு பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் உள்ள வகுப்பறை ஒன்றின் கட்டட மேற்பூச்சு இன்று மாலை திடீரென பெயர்ந்து விழுந்தது. இதில் பத்தாம் வகுப்பு படிக்கும் 3 மாணவிகள் காயம் அடைந்தனர்.

இதையடுத்து காயமடைந்த மாணவிகள் திருப்போரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இதில் தலையில் பலத்த காயமடைந்த மாணவி ஒருவருக்கு 5 தையல் போடப்பட்டுள்ளது. இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேற்பூச்சு பெயர்ந்து விழுந்த கட்டிடம் 8 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாக கூறப்படுகிறது.

திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் இந்த சம்பவம் தொடர்பாக கல்வித்துறைக்கு அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

# தமிழக மீனவர்கள் 32 பேர் சிறைபிடிப்பு இலங்கை கடற்படை அட்டூழியம்



ராமேஸ்வரம், ஆக. 10

தமிழகத்தில் இருந்து மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள், எல்லை தாண்டி மீன் பிடிப்பதாக கூறி இலங்கை கடற்படையினர் சிறை பிடிப்பதும், படகுகளை பறிமுதல் செய்வதும் தொடர் கதையாகியுள்ளது.


இந்த நிலையில், ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் துறைமுகத்தில் இருந்து மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர். அதன்படி, புத்தாளம் அருகே மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி மீனவர்கள் 32 பேரை கைது செய்தனர்.

மேலும் 4 நாட்டுப்படகையும் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட 32 மீனவர்களும் இலங்கை கற்பிட்டி கடற்கரை முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தொடர்ந்து அவர்களிடம் அங்கு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

மீனவர்கள் 32 பேர் சிறைப்பிடிக்கப்பட்ட தகவல் அறிந்த சக மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். உடனடியாக அவர்களை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளனர்.

# செல்போனில் பேசிக்கொண்டே மின்கம்பத்தில் சாய்ந்த கல்லூரி மாணவர் மின்சாரம் தாக்கி பலி



திருச்சி, ஆக. 10

திருச்சி மாவட்டம் தொட்டியம் அடுத்த நாச்சாப்புத்தூர் கருங்காடு பகுதியைச் சேர்ந்தவர் முத்துக்குமார்(23 வயது). இவர்தனியார் பொறியியல் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படித்து வந்தார். இந்த நிலையில் நேற்று இரவு வீட்டின் அருகே செல்போனில் பேசி கொண்டிருந்த போது அருகில் இருந்த மின்கம்பத்தில் சாய்ந்துள்ளார். அப்போது எதிர்பாராதவிதமாக மின்கம்பத்தில் இருந்து மின்சாரம் தாக்கிய நிலையில் முத்துக்குமார் தூக்கி வீசப்பட்டார்.

இதையடுத்து 108 ஆம்புலன்ஸ் வர தாமதமானதால், உறவினர்கள்முத்துக்குமாரைகாரில்வைத்து முசிறி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே அவர் இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து தொட்டியம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். நாச்சாப்புத்தூர் கருங்காடு பகுதியில் மின்வாரியம் சரியாக பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளாததால் அடிக்கடி மின்விபத்துகள் ஏற்படுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# சுதந்திர தினத்தன்று அனைத்து ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டம்: தமிழ்நாடு அரசு அனுமதி

சென்னை, ஆக. 10

சுதந்திர தினமான ஆகஸ்ட் 15ம் தேதி அனைத்து ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது.

இது தொடர்பாக அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குனர் பொன்னையா அனுப்பி உள்ள சுற்றறிக்கையில், "சுதந்திர தினத்தன்று காலை 11 மணியளவில் கிராம சபை கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். கிராம மக்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் இடம், நேரத்தை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

தூய்மையான குடிநீர் விநியோகம், வரி செலுத்தும் சேவை, இணைய வழி மனை பிரிவு, கட்டிட அனுமதி, சுய சான்றிதழ் அடிப்படையில் குடியிருப்பு கட்டிடங்களுக்கு உடனடி பதிவின் மூலம் அனுமதி வழங்குதல் உள்ளிட்டவை குறித்தும் கூட்டத்தில் ஆலோசிக்க வேண்டும்.

மேலும், சுயசான்று கட்டிட அனுமதி பெறுவதற்கான செயல்முறைகள், தமிழ்நாடு எளிமைப்படுத்தப்பட்ட ஊராட்சி கணக்கு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், தூய்மை பாரத இயக்கம், ஜல்ஜீவன் திட்டம் உள்ளிட்டவை தொடர்பாகவும், பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், அரசு பொது கட்டிடங்கள் அனைத்திலும் குழாய் இணைப்புகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்வது உள்ளிட்டவை குறித்தும் விரிவான ஆலோசனை மேற்கொள்ள வேண்டும்" என்று அதில் கூறப்பட்டுள்ளது.

நமது தின கனி
Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
10.8.2024

# அதிக கிராஃபிக்ஸ் காட்சிகளுடன் "மாயன்" வெளியாகும் தேதி அறிவிப்பு



திரைப்பட துறையில் யாரும் எதிர்பாராமல் வெற்றிபெற்றபடங்கள்ஏராளம்உண்டு.அத்தகைய படங்கள் பெரும்பாலும் நம்பிக்கை என்ற ஒற்றை அடிப்படையில் தான் உருவாக்கப்படுகின்றன.

இதைத் தொடர்ந்து சிறப்பான கதை மற்றும் தொழில்நுட்ப குழுவின் நேர்த்தியான படைப்பு தான் அதை வெற்றி படமாக மாற்றும்.

அந்த வரிசையில் "மாயன்" திரைப்படம் நிச்சயம் இணையும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

நேரடியாக ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்ட முதல் இந்திய திரைப்படம் மாயன். இந்த படம் ஆங்கிலம் மட்டுமின்றி தமிழ் மொழியிலும் வெளியிடப்பட உள்ளது.

ஃபேண்டஸி, திரில்லர் மற்றும் வரலாறு என மூன்றுவித ஜானரில் நகரும் வகையில், இந்த படத்தின் கதை எழுதப்பட்டு இருக்கிறது. இவை அனைத்தும் ஒரு மனிதனின் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களாக ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளன.

இந்த படத்தின் 50 சதவீதத்திற்கும் அதிகமான காட்சிகள் கிராஃபிக்ஸ் முறையில் உருவாக்கப்பட்டு உள்ளன.

2 பதிப்புகளாக மாயன் படத்தை உருவாக்கி இருக்கிறார்கள். ஒன்று, மாயன் காலண்டர் மற்றும் உலகின் முடிவு பற்றியும், இரண்டு, உலகம் அழிந்ததா இல்லையா? மாயனுக்கும் கடவுளுக்கும் என்ன சம்மந்தம் என்பது பற்றி உருவாக்கி இருக்கிறார்கள்.

முதல் பதிப்பை விட இரண்டாம் பதிப்பில் கூடுதல் கிராபிக்ஸ் காட்சிகள் வைத்திருக்கிறார்கள்.

ஜெ.ராஜேஷ் கன்னா எழுதி, இயக்கி இருக்கும் "மாயன்" படத்தை ஃபாக்ஸ் அண்ட் க்ரோ ஸ்டூடியோஸ் நிறுவனம் தயாரித்து இருக்கிறது. ஜி.வி.கே.எம். எலிபன்ட் பிக்சர்ஸ் டாட்டோ கணேஷ் மோகன சுந்தரம் இந்த படத்தை இணைந்து தயாரித்துள்ளார்.

இந்த படத்தில் வினோத் மோகன் மற்றும் பிந்து மாதவி முன்னணி கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இவர்களுடன் ஆங்கில பதிப்பில் பிரியங்கா மோகன் சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளார்.

இவர்கள் தவிர பியா பாஜ்பாய், ஜான் விஜய், ஆடுகளம் நரேன், சாய் தீனா, கஞ்சா கருப்பு, ராஜ சிம்மன், ஶ்ரீ ரஞ்சனி, ரஞ்சனா நாச்சியார், கே.கே. மேனன் மற்றும் பலர் நடித்துள்ளனர்.

இந்த படத்திற்கு எம்.எஸ். ஜோன்ஸ் ரூபெர்ட் இசையமைத்துள்ளார். ஒளிப்பதிவு பணிகளை கே. அருண் பிரசாத், படத்தொகுப்பு பணிகளை எம்.ஆர். ராஜேஷ் மேற்கொண்டுள்ளனர். கலை இயக்க பணிகளை ஏ. வனராஜ் மேற்கொண்டுள்ளார்.

இந்த படத்தின் இறுதிக்கட்ட பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ஆம் தேதி படத்தை வெளியிடுவதற்கான பணிகளில் படக்குழு ஈடுபட்டுள்ளது.

# ரெட் புடவையில் அசத்தும் மாளவிகா மோகனன் வைரலாகும் புகைப்படம்



கேரளாவில் இருந்து கோலிவுட் வந்து பேமஸ் ஆனநடிகைகளில்மாளவிகாமோகனனும்ஒருவர். இவர் கார்த்திக் சுப்புராஜ் இயக்கிய ரஜினியின் பேட்ட திரைப்படத்தில் நடிகர் சசிகுமாருக்கு ஜோடியாக நடித்திருந்தார். பேட்ட படத்தின் வெற்றிக்கு பின்னர் மாளவிகாவுக்கு கிடைத்த ஜாக்பாட் வாய்ப்புதான்நடிகர்விஜய்யின்மாஸ்டர் திரைப்படம்.

மாஸ்டர்படமும்ஹிட்டானதால்கோலிவுட்டில் நட்சத்திர நாயகியாக வலம் வந்தார் மாளவிகா. தற்போது பா.இரஞ்சித் இயக்கத்தில் பிரம்மாண்டமாக உருவாகி இருக்கும் தங்கலான் படத்தில் நடித்துள்ளார்.

தங்கலான் திரைப்படத்தில் ஆரத்தி என்கிற கேரக்டரில் மாளவிகா நடித்துள்ளார். இந்த திரைப்படம் வருகிற ஆகஸ்ட் 15ந் தேதி திரையரங்குகளில் ரிலீஸ் ஆகிறது. இந்நிலையில் தங்கலான் புரமோஷனின் போது டார்க் ரெட் கலர் சேலையில் எடுத்த போட்டோஷூட் புகைப்படங்களை பகிர்ந்துள்ளார். அந்த புகைப்படங்களுக்கு லைக்ஸ் அள்ளுகிறது.

# வம்பிழுக்கும் நெட்டிசன்கள் மனம் திறந்த பிரியா பவானி சங்கர்





சமீபத்தில் ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன், பிரியா பவானி சங்கர், சித்தார்த், எஸ்.ஜே சூர்யா மற்றும் பலர் நடித்து வெளியாகியது இந்தியன் 2 திரைப்படம். வெளியாகி மக்களிடையே கலவையான விமர்சனத்தை பெற்றது.

இப்படத்தின் தோல்விக்கு காரணம் நடிகை பிரியா பவானி சங்கர் நடித்தது தான் என்றும்,அவரதுதுரதிஷ்டம்தான்காரணம், என்று நெட்டிசன்கள் பதிவிட்டு வந்தனர். பிரியா பவானி சங்கர் நடித்த பொம்மை, அகிலன், ருத்ரன், ரத்னம், இந்தியன் 2 ஆகிய திரைப்படங்கள் எதுவும் சரியாக ஓடவில்லை.

நெட்டிசங்களின் கமெண்டை குறித்து பிரியா சமீபத்தில் நடந்த நேர்காணலில் அவரது கருத்தை பகிர்ந்துள்ளார். அதில் " திரைப்படம் நன்றாக ஓடாதத்துக்கு காரணம் முழுக்க, முழுக்க என்னை காரணம் சொல்வது நியாயம் இல்லை, என்னைதுரதிஷ்டசாலி என்று கூறும் பொழுது மிகவும் மனக்கஷ்டத்துக்கு ஆளானேன். இந்தியன் 2 திரைப்படத்தில் நடித்ததற்கு நான் எந்த விதத்திலும் வருத்தப்படமாட்டேன். " என்று கூறியுள்ளார். கூடுதலாக அடுத்தாண்டு அவருக்கு அவருடைய காதலரான ராஜ வேலை திருமணம் செய்யப்போவதாக கூறியுள்ளார்.

பிரியா பவானி சங்கர் அடுத்ததாக டிமான்டி காலனி 2 திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படம் வரும் ஆகஸ் 15 ஆம் தேதி வெளியாகவுள்ளது.

# மாரி செல்வராஜ் இயக்கத்தில் கார்த்தி வெளியான அப்டேட்



பரியேறும் பெருமாள் படத்தை இயக்கி தனக்கென ஒரு இடத்தை தமிழ் சினிமாவில் பிடித்துக் கொண்டார் இயக்குனர் மாரி செல்வராஜ். அதைத்தொடர்ந்து தனுஷ் நடிப்பில் கர்ணன் திரைப்படத்தை இயக்கினார். இப்படம் மாபெரும் வெற்றியைப் பெற்றது.

கடந்த ஆண்டு உதயநிதி ஸ்டாலின் மற்றும் வடிவேலு நடித்த மாம்மன்னன் திரைப்படத்தை இயக்கினார். உதயநிதி ஸ்டாலின் நடித்த கடைசிப் படம் இதுவே.

தற்பொழுது வாழை என்ற படத்தை மாரி செல்வராஜ் இயக்கி தயாரித்தும் உள்ளார். இப்படத்தில் கலையரசன், நிகிலா விமல், பிரியங்கா நாயர் மற்றும் பலர் நடித்துள்ளனர். இப்படத்திற்கு தேனி ஈஸ்வர் ஒளிப்பதிவு மேற்கொள்கிறார். சந்தோஷ் நாராயணன் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

திரைப்படம் வரும் ஆகஸ்ட் 23 ஆம் தேதி வெளியாகவுள்ளது. சமீபத்தில் நடந்த நேர்காணல் ஒன்றில் மாரி செல்வராஜ் அவர் அடுத்து இயக்கப் போகும் படங்களை குறித்து பகிர்ந்துக் கொண்டார்.

அவர் பைசன் திரைப்படத்திற்கு அடுத்து தனுஷ் நடிப்பில் படத்தை இயக்கப்போகிறார். அதைதொடர்ந்து கார்த்தியை வைத்து படம் ஒன்றை இயக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

'மாமன்னன் திரைப்படம் எடுக்கும் சமயத்தில் கார்த்தி என்னை நேரில் அழைத்து கதைக் கேட்டார், நான் ஒரு 5 நிமிட கதையை கூறினேன், என்னுடைய கதைக்களமும், கதையின் வீரியமும் அவருக்கு நன்றாக புரிந்தது அதனால். நானும் அவரும் ஒன்றாக பணியாற்றவுள்ளோம்.' என கூறியுள்ளார்.

கார்த்தி தற்பொழுது மெய்யழகன், வா வாத்தியார், சர்தார் 2 , போன்ற படங்களில் நடித்து வருகிறார். அடுத்தடுத்து வித்தியாசமானகதைக்களத்தில்பிரபல இயக்குனர்களுடன்இணைந்து படத்தில் நடித்து வருவதால் கார்த்தி நடிக்கும் படம் மீது ரசிகர்களிடம் பெரும் எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

# வெண்கலம் வென்ற பஞ்சாப் வீரர்களுக்கு ரூ.1 கோடி பரிசு: பகவந்த் மான் அறிவிப்பு



ஒலிம்பிக்கில் ஆண்கள் ஹாக்கி போட்டியில் வெண்கலப் பதக்கத்துக்கானபோட்டியில் இந்தியாவும், ஸ்பெயினும் இன்று மோதின.

இதில் இந்திய அணி 21 என்ற கணக்கில் ஸ்பெயினை வீழ்த்தி வெற்றி பெற்று வெண்கல பதக்கத்தைக் கைப்பற்றி அசத்தியது.

ஒலிம்பிக் ஹாக்கியில் இந்தியா வெண்கலம் வென்றதற்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி உள்ளிட்ட பலர் வாழ்த்து தெரிவித்தனர்.

மேலும், உள்துறை மந்திரி அமித்ஷா, காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி உள்பட பலர் வாழ்த்து தெரிவித்தனர்.

இந்நிலையில், பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த ஆம் ஆத்மி கட்சியின் முதல் மந்திரியான பகவந்த்சிங் மான் எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய ஹாக்கி அணியில் இடம்பிடித்துள்ள பஞ்சாப் வீரர்களுக்கு ஒரு கோடி ரூபாய் பரிசாக வழங்கப்படும் என பதிவிட்டுள்ளார்.

ஹாக்கி அணி கேப்டன் ஹர்மன்பிரித் சிங், துணை கேப்டன் ஹர்திக் சிங் உள்பட 10 வீரர்கள் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாரீஸ் ஒலிம்பிக் ஹாக்கி: வெண்கலம் பதக்கம் வென்ற இந்தியா



ஒலிம்பிக்கில் ஆண்கள் ஹாக்கி போட்டியில் அரைஇறுதியில் தோல்வி அடைந்த இந்தியாவும், ஸ்பெயினும் இன்று வெண்கலப்பதக்கத்துக்கான ஆட்டத்தில் மோதுகின்றன. ஹர்மன்பிரீத் சிங் தலைமையிலான இந்திய அணி அரைஇறுதியில் ஜெர்மனியிடம் 3-2 என்ற கோல் கணக்கில் போராடி தோற்றது.

கடந்த முறை வெண்கலம் வென்ற இந்தியா அந்த பதக்கத்தை தக்க வைக்குமா என்று எதிர்பார்ப்புகளுடன் களமிறங்கியது. இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருந்தாலும் முதல் கால் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை.

இதனையடுத்து நடந்த 2வது கால் பாதியின் 18வது நிமிடத்தில் ஸ்பெயின் தனது முதல் கோலை பதிவு செய்தது. 2வது கால் பாதியின் இறுதி வரை போராடிய இந்திய அணி 30வது நிமிடத்தில் ஒரு கோலை பதிவு செய்தது. இதனால் 1-1 என்ற கணக்கில் 2வது கால் பாதி சமன் நிலையில் இருந்தது.

3வது கால் பாதியின் 33வது நிமிடத்தில் இந்திய அணி ஒரு கோல் அடித்தது. ஸ்பெயின் அணியால் கோல் போட முடியவில்லை. இதனால் 3வது கால் பாதியின் முடிவில் இந்திய அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. 4வது மற்றும் கடைசி கால் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்க முயன்றனர். இறுதி வரை போராடிய நிலையில் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் 2-1 என்ற கணக்கில் இந்திய அணி வெற்றி பெற்று வெண்கல பதக்கத்தை வென்றது.

# இலங்கையிடம் தோல்வி இந்திய அணியை கிண்டல் செய்த பாகிஸ்தான் வீரர்



இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை இந்திய அணி 02 என்ற கணக்கில் இழந்தது. இலங்கைக்கு எதிராக 27 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய அணி தொடரை இழந்து இருக்கிறது. இந்த தொடரில் முதல் முறையாக பயிற்சியாளராக பதவி ஏற்றுள்ள கம்பீருக்கு இது மிகப்பெரிய பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

பந்துவீச்சில் இந்த தொடரில் இந்தியா சொதப்பியது என்று சொன்னால் பேட்டிங்கில் மிகவும் மோசமாக விளையாடியது. இலங்கை அணி விக்கெட்டுகளை முதலில் அடுத்தடுத்து எடுத்தாலும் கடைசி மூன்று வீரர்களின் விக்கெட்டை எடுக்க முடியாமல் இந்தியா தடுமாறியது. இது ஒட்டுமொத்த இந்திய ரசிகர்களுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்தநிலையில்பாகிஸ்தான்வேகப்பந்துவீச்சாளர்ஜூனைத் கான் இந்தியாவை கிண்டல் அடித்திருக்கிறார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

பும்ரா இல்லாமல் இந்திய அணியின் பந்துவீச்சு ஜீரோவாக இருக்கிறது. மேலும் தாம் சொல்வதை ரசிகர்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா என்றும் அவர் கேள்வி கேட்டுள்ளார். இதற்கு பலரும் நீங்கள் சொல்வது சரிதான் பும்ரா போன்ற ஒரு வீரர் இல்லாமல் இந்தியா தடுமாறி வருவதாக கருத்து தெரிவித்துள்ளனர்.


கடந்த டி20 உலக கோப்பையில் பும்ரா 15 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார். இந்த நிலையில் அவருக்கு பதிலாக முஹம்மது சிராஜ், ஆர்ஸ்தீப் சிங் ஆகியோர் இந்த தொடரில் விளையாடினர். அதிலும் மூன்றாவது ஒருநாள் போட்டியில் ஆர்ஸ்தீப் சிங் இடம்பெறவில்லை. குறிப்பாக இந்திய அணி பிளேயிங் லெவன் தேர்வு செய்த விதம்தான் தோல்விக்கு காரணம் என்று பலரும் கம்பீரை சாடி வருகின்றனர்.

# 100மீ தடை தாண்டும் ஓட்டம்: அரையிறுதி வாய்ப்பை இழந்த ஜோதி யார்ராஜி



பாரிஸ் ஒலிம்பிக் 2024 இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. இந்த தொடரானது வரும் 11ம் தேதியுடன் முடிவடைகிறது. இதுவரையில் இந்தியா 3 வெண்கலப் பதக்கங்களை மட்டுமே கைப்பற்றி பதக்கப் பட்டியலில் 67வது இடத்தில் உள்ளது.

இந்த நிலையில் இன்று பிற்பகல் நடைபெற்ற மகளிருக்கான 100மீ தடை ஓட்டப் போட்டியில் 2வது வாய்ப்பில் இந்திய வீராங்கனை ஜோதி யார்ராஜி 4வது இடம் பிடித்து அரையிறுதி போட்டி வாய்ப்பை இழந்து வெளியேறினார். ஏற்கனவே முதல் சுற்றான ஹீட் பிரிவில் 7வது இடம் பிடித்த நிலையில், அடுத்து சுற்றுக்கு முன்னேற கிடைத்த 2வது வாய்ப்பில் 13.17 வினாடிகளில் இலக்கை கடந்து 4வது இடம் பிடித்து அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறினார். இதற்கு முன்னதாக ஆண்களுக்கான 3000மீ ஸ்டீபிள்சேஸ் போட்டியில் தடகள வீரர் அபினாஷ் சேபிள் ஹீட் போட்டியில் 5வது இடம் பிடித்திருந்த நிலையில் இறுதிப் போட்டியில் 8:14:18 வினாடிகளில் இலக்கை கடந்து 11வது இடம் பிடித்து வெளியேறினார். இந்த தொடரில் தோல்வி அடைந்து அவர் வெளியேறியிருந்தாலும், வரும் 2025ம் ஆண்டு நடைபெற உள்ள உலக சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பை அவினாஷ் சேபிள் தக்க வைத்துக் கொண்டுள்ளார்.



**உரைப்பா ருரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன்
ஈவார்மேல் நிற்கும் புகழ்**

**விளக்கம்:**

புகழ்ந்து சொல்கின்றவர் சொல்பவை எல்லாம் வறுமையால் இரப்பவர்க்கு ஒரு பொருள் கொடுத்து உதவுகின்றவரின் மேல் நிற்கின்ற புகழேயாகும்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.